## வேலூர், திருவண்ணாமலை மாவட்டத்தில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை

சென்னை,அக்.29–

தொடர் மழை காரணமாக வேலூர், திருவண்ணாமலை மாவட்டத்தில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை விடப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை சுற்று வட்டார பகுதிகளில் கனமழை வெளுத்து வாங்கியது. தொடர் மழை காரணமாக இன்று பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்படுவதாக மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார்.

அதேபோல், வேலூர் மாவட்டத்திலும் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அளிக்கப்படுவதாக மாவட்டர் ஆட்சியர் அறிவித்துள்ளார்.

## பள்ளி மாணவர்களுக்கு இறகுப்பந்து போட்டி

சென்னை, அக். 29–

சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவிகளுக்கான இறகுப்பந்து போட்டி நவம்பர் 9–ந் தேதி மேல் அயணம்பாக்கத்தில் உள்ள சதிஷ் சிவலிங்கம் ஸ்டேடியத்தில் நடைபெறுகிறது.

இந்த போட்டியில் பங்கேற்க விரும்பும் 3–ம் வகுப்பு முதல் 10–ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகள் போட்டி ஒருங்கிணைப்பாளரை 9380869045 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். பல்வேறு பிரிவுகளில் நடத்தப்படும் இந்த போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் 9 வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு சுழற்கேடயம், பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

## சூதாட்டம்: 2 பேர் கைது

காஞ்சிபுரம், அக் 29–

காஞ்சிபுரம் பிள்ளையார்பாளையம் தார்த்தி மேடு என்ற இடத்தில் மங்காத்தா சூதாட்டம் நடப்பதாக பெரிய காஞ்சிபுரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ரஜினிகாந்துக்கு தகவல் கிடைத்தது. உடனடியாக சப்இன்ஸ்பெக்டர் வினோத் குமார் மற்றும் போலீசாருடன் அவர் அங்கு விரைந்து சென்றார்.

அப்போது தடைசெய்யப்பட்ட மங்காத்தா சூதாட்டம் விளையாடிக் கொண்டிருந்த பிள்ளையார் பாளையத்தை சேர்ந்த வரதராஜன் (30), ஒளி முகமது பேட்டை சேர்ந்த பாலமுருகன் (27) ஆகியோரை போலீசார் கைது செய்தனர்.

இவர்களிடமிருந்து சூதாட்டத்திற்கு பயன்படுத்திய 40 சீட்டு கட்டுகள், ரொக்க பணம் ரூ 150 ஆகியவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர்.

## காஞ்சீபுரத்தில் பலத்த மழை

காஞ்சீபுரம், அக் 29–

காஞ்சீபுரத்தில் இன்று காலை முதலே பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் காஞ்சீபுரம் ரங்கசாமிகுளம் மேட்டு தெரு, இரட்டை மண்டபம், ஓரிக்கை, பெரியகாஞ்சீபுரம் உள்பட பல்வேறு இடங்களில் மழை நீர் ரோட்டில் ஆறு போல் ஓடியது. இதனால் வெப்பம் தணிந்து மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்த பலத்த மழையினால் மாணவ–மாணவிகள் மிகவும் சிரமப்பட்டு பள்ளிக்குச் சென்றனர்.

**சீன அதிபருக்கு மாமல்லபுரம், ரஷ்ய அதிபருக்கு மதுரை**

# அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை பார்க்க வரும் விளாடிமீர் புடின்

புதுடெல்லி,அக்.29–

உலகப்புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை பார்க்க அடுத்த ஆண்டு ஜனவரியில் ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடின் வர உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்ய அதிபர் புடினுடன் பிரதமர் நரேந்திர மோடியும் இணைந்து ஜல்லிக்கட்டை பார்வையிட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. ரஷ்ய அதிபர் வருகை குறித்து டிசம்பர் மாதத்தில் அதிகாரப்பூர் அறிவிப்பு வெளியாகலாம் என்று தெரிகிறது. சீன அதிபர் ஜீ ஜின்பிங்கும், பிரதமர் நரேந்திர மோடியும் கடந்த 11 ஆம் தேதி முதல் 13 ஆம் தேதி வரை மாமல்லபுரத்தில் முறைசாரா உச்சிமாநாட்டை நடத்தினர்.



இதனால் மாமல்லபுரம் சுற்றுலா பயணிகளிடையே மிகப் பெரிய அங்கீகாரத்தை பெற்றது. இந்த நிலையில் சீன அதிபரை தொடர்ந்து ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதினும் தமிழகத்துக்கு வருகை தருகிறார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. மதுரையில் ஜனவரி மாதம் நடை பெறும் ஜல்லிக்கட்டு போட்டிகளை காண்பதற்காக அவர் தமிழகம் வருகை தருகிறார் என தெரிகிறது.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அவனியாபுரம், பாலமேடு மற்றும் உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூரிலும் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறும். ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்கும் காளைகளை தயார் செய்யும் வகையில், அவற்றிற்கு நீச்சல் பயிற்சி, ஓட்டம், மண்குவியலில் மண் குத்துதல், ஓட்டம், மாதிரி வாடி வாசல் அமைத்து திறந்துவிடுதல் போன்ற பயிற்சிகளை காளை வளர்ப்போர் பயிற்சி அளிப்பர்.

# அபுபக்கர் அல் பாக்தாதியின் உடல்: அமெரிக்க ராணுவம் கடலில் வீசியதாக தகவல்

வாஷிங்டன்,அக்.29–

அபுபக்கர் அல் பாக்தாதியின் உடலை அமெரிக்க ராணுவம் கடலில் வீசியதாக பெண்டகன் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேற்கு ஆசிய நாடான ஈராக்கை சேர்ந்தவர் அபுபக்கர் அல் பாக்தாதி (வயது 48). இவர், 2014ம் ஆண்டு ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தை தொடங்கினார். இந்த இயக்கம், அடுத்தடுத்து உலகத்தின் பல பகுதிகளில் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டது. இதனால், அல் பாக்தாதி மிகக்குறுகிய காலத்திலேயே பிரபலமாகி விட்டார்.

சிரியா, ஈராக் ஆகிய நாடுகளின் சில பகுதிகள், ஐ.எஸ். இயக்கத்தின் கட்டுப்பாட்டில் வந்தன. அல் பாக்தாதி தொடர்ந்து தலைமறைவாகவே இருந்து வருகிறார். அவரைப்பற்றி தகவல் கொடுப்பவருக்கு ரூ.177 கோடி பரிசு வழங்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்நிலையில், சிரியா நாட்டின் வடமேற்கு பகுதியில் இட்லிப் என்ற இடத்தில் உள்ள ஒரு பெரிய கட்டிடத்தில் அல் பாக்தாதி தங்கி இருப்பதாக அமெரிக்க படைகளுக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, இந்த கட்டிடத்திற்குள் அதிரடியாக புகுந்த அமெரிக்க படையினர் தாக்குதல் நடத்தினர்.

அமெரிக்க படையினருடன் கொண்டு செல்லப்பட்ட நாய்களால் துரத்தப்பட்ட அல் பாக்தாதி, ஒரு சுரங்கத்துக்குள் புகுந்தார். அங்கிருந்து வெளியேற வழி இல்லாத நிலையில், தன் உடலில் கட்டி இருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தார். இதில் அவர் உடல் சிதறி பலியானார். குண்டு வெடித்ததால், சுரங்கத்தின் மேல்பகுதி இடிந்து விழுந்தது.

அந்த இடிபாடுகளை அகற்றி விட்டு, அல் பாக்தாதியின் உடல் பாகங்களை அமெரிக்க படையினர் சேகரித்தனர். அமெரிக்க சிறப்பு படையினரின் இந்த தாக்குதல் முழுவதும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்புக்கு நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. வெள்ளை மாளிகையின் ஒரு விசேஷ அறையில் இருந்தபடி, அவரும், துணை ஜனாதிபதி மைக் பென்ஸ், ராணுவ உயரதிகாரிகள் உள்ளிட்டோரும் அதை நேரலையில் பார்த்தனர்.

அபுபக்கர் அல் பாக்தாதியின் உடலை அமெரிக்க ராணுவத்தினர் கடலில் அடக்கம் செய்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால், எந்த கடல் பகுதியில் வீசப்பட்டது? எந்த நேரம் வீசப்பட்டது? என்பது குறித்த எந்த தகவலும் வெளியிடவில்லை. கடந்த 2011 ஆம் ஆண்டு, அமெரிக்க ராணுவத்தால் கொல்லப்பட்ட அல் கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடனின் உடலும் கடலில் வீசப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**கன்னியாகுமரி, தூத்துக்குடிக்கு 10 குழுக்கள்**

# ‘கியார்’ புயல்; அரசின் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள்: அமைச்சர் ஜெயக்குமார் தகவல்

சென்னை, அக். 29

அரபிக்கடலில் கியார் புயல் வலுப்பெற்றதைத் தொடர்ந்து தமிழக மீனவர்களைக் காப்பாற்றுவதற்காக எடுக்கப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் டி.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மீன்வளத்துறை அமைச்சர் டி.ஜெயக்குமார் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:

கடந்த 24ந்தேதியன்று திருவனந்தபுரம் மண்டல வானிலை ஆராய்ச்சி மையம் வழங்கிய சிறப்பு வானிலை அறிக்கையில் அரபிக்கடலில் நிலைகொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி தற்போது வலுப்பெற்று ‘கியார்’ என்ற தீவிர புயலாக மாறி கிழக்கு மத்திய அரபிக்கடலில் நிலை கொண்டுள்ளது. அதைத் தொடர்ந்து தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களுக்கு புயல் குறித்த எச்சரிக்கை மாவட்ட மீன்துறை அலுவலர்கள் மூலமாகவும், அனைத்து கடலோர மீனவ அமைப்புகள் மற்றும் மீனவ கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் இவ்வானிலை தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டது.

### கன்னியாகுமரிக்கு குழு சென்றது

மீன்வளத்துறையைச் சார்ந்த இரண்டு மீன்துறை துணை இயக்குனர்கள் தலைமையில் 10 அலுவலர்கள் அடங்கிய குழு, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு புயல் முன்னெச்சரிக்கைப் பணிகளை மேற்கொள்ள அனுப்பி வைக்கப்பட்டது. பிற மாநிலங்களில் கரை திரும்பும் மீனவர்களுக்கு உதவிடும் வகையில் மீன்துறை உயர் அலுவலர்கள் கோவா, ரத்தினகிரி, கார்வார், தேவ்காட் மற்றும் கொச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

குளச்சல் மீன்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தில் 24 மணிநேரமும் செயல்பட்டு வரும் கட்டுப்பாட்டு அறை நிறுவப்பட்டுள்ளது.

### 743 படகுகள் கரை வந்தன

மேற்கண்ட இந்த நடவடிக்கைகள் மூலம் அரபிக்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த 743 படகுகள் பத்திரமாக அருகிலுள்ள துறைமுகங்களுக்கு வந்து சேர்ந்துள்ளன. துறையின் தொடர் நடவடிக்கையின் காரணமாக ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டிருந்த 757 படகுகளை தொடர்பு கொண்டு புயல் பற்றிய முன்னெச்சரிக்கை செய்திகள் வழங்கப்பட்டன.

27ந்தேதி வானிலை அறிக்கையில் தென்மேற்கு வங்கக்கடல், மன்னார் வளைகுடா, குமரி கடல், தென் தமிழக கடலோர பகுதிகள் மற்றும் லட்சத்தீவு பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஏற்பட்டுள்ளதால் அப்பகுதியில் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. வானிலை எச்சரிக்கை தொடர்பான விரிவான செய்தி குறிப்பு, அனைத்து மீனவர் சங்கங்கள், மீனவ பிரதிநிதிகள் மற்றும் பங்கு தந்தைகளுக்கு எழுத்து மூலம் வழங்கப்பட்டுள்ளது.

### 10 குழுக்கள்

ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மீன்பிடிப்பு பணிகள் முழுமையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. கேரளா, கர்நாடகா, கோவா, மராட்டியம், லட்சதீவுகள் மற்றும் குஜராத் மாநில மீன்துறை இயக்குனர்களுக்கு, அப்பகுதியில் உள்ள மீன்பிடிப்பு படகுகளை கடலுக்கு செல்ல வேண்டாம் என எச்சரிக்குமாறும், ஏற்கனவே கியார் புயல் எச்சரிக்கை காரணமாக அந்தந்த மாநிலங்களில் கரையேறிய படகுகளை மீண்டும் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டாம் என்று தெரிவிக்குமாறும் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

கடலோர காவல் படை, கப்பல் படை மற்றும் கடல் மீட்பு ஒருங்கிணைப்பு நிறுவனம் ஆகியவற்றிற்கு மேற்குறிப்பிட்ட பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் ஏற்கனவே மீன்பிடிப்பில் இருந்த மீனவர்களை உடனடியாக கரை திரும்ப எச்சரிக்குமாறு கோரி கடிதம் எழுதப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள புதிய புயல் சின்னத்தைத் தொடர்ந்து சிறப்பு புயல் முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொள்வதற்காக மீன்துறை கூடுதல் இயக்குனர் தலைமையில் 35 துறை அலுவலர்களைக் கொண்ட 10 குழுக்கள் அமைக்கப்பட்டு கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இவர்கள் மாவட்ட நிர்வாகம் மற்றும் தொடர்புடைய பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து புயல் முன்னெச்சரிக்கைப் பணிகளை மேற்கொள்வார்கள். மீனவர்களை புயல் மற்றும் வெள்ள காலங்களில் பாதுகாக்கும் பொருட்டு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மீன்துறை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஆந்திராவில் நீண்ட கால நோயாளிகளுக்கு மாதம் ரூ.10 ஆயிரம் உதவித்தொகை: ஜெகன்மோகன் ரெட்டி உத்தரவு

ஐதராபாத், அக்.29

நீண்ட கால நோயாளிகளுக்கு மாதம் ரூ.10 ஆயிரம் உதவித்தொகை வழங்க ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி உத்தரவிட்டிருக்கிறார்.

ஆந்திர முதலமைச்சராக ஜெகன் மோகன் ரெட்டி பதவியேற்றது முதல் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

அந்த வகையில் ஒரு புதிய திட்டத்திற்கான அரசாணையை ஜெகன்மோகன் ரெட்டி வெளியிட்டுள்ளார். அதன்படி நீண்டகால நோய்களால் அவதிப்பட்டு வரும் நோயாளிகளுக்கு மாத ஓய்வூதியம் வழங்கும் முடிவை ஆந்திர அரசு எடுத்துள்ளது.

அதாவது ‘தலசீமியா’, ‘அனிமீயா’, ‘ஹிமோபீலியா’ உள்ளிட்ட நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு மாதம் ரூ.10 ஆயிரம் உதவித்தொகையாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நோய் பாதிப்பால் நடமாட முடியாமல் முடங்கி உள்ளவர்கள் மற்றும் சக்கர நாற்காலியிலுள்ள நோயாளிகள், சிறுநீரக பாதிப்புகளால் அவதிப்பட்டு வருபவர்கள் என அனைவருக்கும் மாதம் ரூ.5 ஆயிரம் உதவித்தொகையாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


**வீணா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 309, சேலம் மெயின் ரோடு, கொமாரபாளையம் 638 183,

**அறிவிப்பு**

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 47, கட்டுப்பாடு 33ன்படி, 30 செப்டம்பர் 2019ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கையாகாத நிதிநிலை முடிவு அறிக்கையை பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் செவ்வாய்க்கிழமை, 05 நவம்பர் 2019 அன்று காலை 10.00 மணிக்கு 11எப், காந்திபுரம், கொமாரபாளையம் – 638 183–ல் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வீணா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்டிற்காக

இடம்: கொமாரபாளையம் K.S. இளவரசன்
தேதி: 25.10.2019 அங்கீகரிக்கப்பட்ட கையொப்பமிட்டவர்

**எப்சம் புராபர்டீஸ் லிமிடெட்**

CIN: L24231TN1987PLC014084
பதிவு அலுவலகம்: ‘‘ரீஜன்சி ஹவுஸ்’’, 2ஏ, 2வது தளம், 250/7, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 006.
Tel : 91 44 43021233 E-mail : epsomproperties@gmail.com Web: www.epsom.in

**அறிவிப்பு**

இதர அலுவல்களுக்கு இடையே, செபி (எல்ஓடிஆர்) விதிகள் 2015–ன் விதி 47ன்படி, 30 செப்டம்பர், 2019ல் முடிந்த இரண்டாவது காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து, ஒப்புதல் அளிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் திங்கட்கிழமை, 4 நவம்பர், 2019 அன்று நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

எப்சம் புராபர்டீஸ் லிமிடெட்டிற்காக

இடம் : சென்னை சப்னா தன்வார்
தேதி : 26.10.2019 கம்பெனி செயலாளர் மற்றும் ஒப்புதல் அதிகாரி

SPEL

**ஸ்பெல் செமிகண்டக்டர் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 5 சிஎம்டிஏ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், மறைமலை நகர் (சென்னை) 603 209.
CIN : L32201TN1984PLC011434

**அறிவிப்பு**

செப் 30, 2019ல் முடிந்த அரை ஆண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை இதர அலுவல்களுடன் சேர்த்து பரிசீலித்து பதிவு செய்ய கம்பெனி இயக்குநர்கள் குழுவின் கூட்டம், நவம்பர் 7, 2019 வியாழக்கிழமை அன்று மாலை 4.05 மணிக்கு வேல் விலாஸ், 3/21, கோட்டூர் கார்டன், 3வது பிரதான சாலை, கோட்டூர்புரம், சென்னை 600 085ல் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஸ்பெல் செமிகண்டக்டர் லிமிடெட்டுக்காக

இடம்: மறைமலை நகர் ஒப்பம்/– S.S. அருணாசலம்
தேதி : அக். 29, 2019 கம்பெனி செயலாளர் & ஒப்புதல் அதிகாரி

**கியான் டெவலபர்ஸ் அண்ட் பில்டர்ஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: ‘‘கியான் கிரண்’’, 6, ஹனுமந்த ராவ் தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை 600 017.
Tel : 044–28157644, E–mail : gyandevelopers@yahoo.com CIN: L70101TN1992PLC022624

**அறிவிப்பு**

SEBI (LODR) விதிகள் 2015ன்படி, இதர அலுவல்களுடன் 30 செப்டம்பர், 2019ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் புதன்கிழமை, 6 நவம்பர் 2019 அன்று மாலை 4.30 மணிக்கு கம்பெனியின் பதிவு அலுவலகம், கியான் கிரண், எண். 6, ஹனுமந்த ராவ் தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை 600 017ல் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

குழுவின் ஆணைப்படி
கியான் டெவலபர்ஸ் அண்ட் பில்டர்ஸ் லிமிடெட்டுக்காக

இடம்: சென்னை–17 ஒப்பம் T. அசோக் ராஜ்
தேதி: 29.10.2019 நிர்வாக இயக்குனர்
DIN: 00575471

equitas

**எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்**

CIN: L65100TN2007PLC064069
பதிவு அலுவலகம்: 410A, 4வது மாடி, ஸ்பென்சர் ப்ளாசா, ஃபேஸ் 2, எண். 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 2.
தொ.பே: 044-42995000 | தொலைநகல்: 044-42995050
www.equitas.in | மின் அஞ்சல்: secretarial@equitas.in

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015–ன், விதி 29 மற்றும் விதி 47ன் படி, செப்டம்பர் 30, 2019 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தனிப்பட்ட மற்றும் ஒட்டு மொத்த தணிக்கை செய்யப்படாத நிதி நிலை முடிவுகள் மற்றும் இதர விஷயங்களைப் பரிசீலிக்க, நவம்பர் 08, 2019 வெள்ளிக்கிழமை அன்று நிறுவன இயக்குனர்களின் கூட்டம் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு, நிறுவனத்தின் இணையதளம் www.equitas.in மற்றும் பங்குச் சந்தை இணையதளங்களில் www.bseindia.com மற்றும் www.nseindia.com உள்ளது.

எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டுக்காக

இடம் : சென்னை தீப்தி ஈ.
தேதி : அக்டோபர் 29, 2019 நிறுவன செயலர்

**ப்ரித்வி எக்சேஞ் (இந்தியா) லிமிடெட்**

(முன்னர் ப்ரித்வி சாப்டெக் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)
CIN: L30006TN1995PLC031931
பதிவு அலுவலகம்:11, கிழக்கு ஸ்பர் டேங்க் ரோடு, சேத்துப்பட்டு, சென்னை–600 031, தமிழ்நாடு
Website:www.prithvifx.com Email: secy@prithvifx.com Tel : Phone : 044 -43434272

**அறிவிப்பு**

செபி (எல்ஓடிஆர்) விதிகள் 2015 விதி 29ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே 30 செப்டம்பர், 2019ல் முடிந்த காலாண்டு மற்றும் அரை ஆண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து பதிவு செய்யவும் மற்றும் கம்பெனி தலைவரின் ஒப்புதலின்பேரில் இதர அலுவல்களை மேற்கொள்ளவும் 2019–20 நிதி ஆண்டிற்கான கம்பெனி இயக்குனர்கள் குழுவின் இரண்டாவது காலாண்டு கூட்டம் சனிக்கிழமை, 09 நவம்பர் 2019 அன்று மாலை 03.00 மணிக்கு ஹோட்டல் அசோகா, எழும்பூர், சென்னையில் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் இணையதளம் (www.prithvifx.com) மற்றும் கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்படும் பிஎஸ்இ லிமிடெட்டின் இணையதளத்தில் (http://www.bseindia.com) உள்ளது.

கம்பெனியின் உள்வர்த்தகர் நடத்தை விதி தொகுப்பின்படி செவ்வாய்க்கிழமை, 01 அக்டோபர் 2019 முதல் 09 நவம்பர் 2019 அன்று பொதுமக்களுக்கு முடிவுகள் அறிவித்த பின்னர் 48 மணி நேரம் வரை கம்பெனியின் அனைத்து இயக்குனர்கள்/அதிகாரிகள்/நியமிக்கப்பட்ட ஊழியர்கள் மற்றும் அவரது உறவினர்களுக்கு கம்பெனியின் பத்திரங்கள் பரிவர்த்தனைகள் மூடப்பட்டிருக்கும் என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

ப்ரித்வி எக்சேஞ் (இந்தியா) லிமிடெட்டுக்காக
(முன்னர் ப்ரித்வி சாப்டெக் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)
ஒப்பம்/– பவன் குமார் கவாத்

இடம்: சென்னை (முழு நேர இயக்குனர்)
தேதி : 28.10.2019 (Din No.07095542)


## பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரராகிய திருமதி B.வெங்கடலட்சுமி, வயது 39, க/பெ K.பாலாஜி வசிக்குமிடம் எண் 7A, அர்ஜீனன் மெயின்ரோடு, வரதராஜ் நகர், பெரியகுப்பம், திருவள்ளூர் 602001 (Cell. 9150240912) என்பவர் தனது தாத்தாவான திரு,சுப்புராஜீ த/பெ வெங்கடராஜீ என்பவர் எனது கட்சிக்காரர் திருமதி B.வெங்கடலட்சுமி என்பவருக்கும், எனது கட்சிக்காரரின் தந்தை K.ராமச்சந்திரன் என்பவருக்கும், எனது கட்சிக்காரரின் சித்தப்பாவான திரு.K.V.சுந்தரம் என்பவருக்கும் ஒரு உயில் எழுதி வைத்தார் என்றும் அந்த உயில் ஊத்துக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 34/1996 தேதி 12.11.1996 ஆக பதிவாகியுள்ளதாக எனது கட்சிக்காரர் கூறுகின்றார். இந்த உயிலை ஜெராக்ஸ் எடுப்பதற்காக எனது கட்சிக்காரரான B.வெங்கடலட்சுமி என்பவர் கடந்த 23.10.2019 அன்று காலை 11 மணிக்கு திருவள்ளூர் நகராட்சிக்குப் பக்கத்தில் உள்ள ஜெராக்ஸ் கடைக்கு வந்தார் என்றும் அசல் உயிலை ஜெராக்ஸ் எடுத்துவிட்டு அந்த அசல் உயிலை ஒரு கைப்பையில் வைத்துக்கொண்டு வெளியே வந்து திருவள்ளூர் செல்வதற்காக நின்று கொண்டிருந்தார் என்றும் அதற்குள் எனது கட்சிகாரருக்கு போன் வந்ததால் எனது கட்சிக்காரர் அந்த கைப்பையை ஒரு மோட்டார் சைக்கிள் மீது வைத்துவிட்டு போன் பேசிக்கொண்டிருந்தார் என்றும் எனது கட்சிக்காரர் கூறுகின்றார். ஞாபகமறதியாக எனது கட்சிக்காரர் ஆட்டோவில் ஏறி திருவள்ளூர் சென்றார் என்றும், ஆட்டோவிலிருந்து இறங்கியவுடன் கைப்பையை வைத்துவிட்டு வந்த விவரம் தெரிந்து, திரும்பவும் திருவள்ளூர் நகராட்சிக்கு வந்து கைப்பையை வைத்த இடத்தில் தேடிப்பார்த்தார் என்றும், கைப்பையும் காணவில்லை என்றும், மோட்டார் சைக்கிளும் காணவில்லை என்பதை அறிந்த எனது கட்சிக்காரர் அக்கடையின் பக்கத்தில் இருந்தவர்களிடமும் கேட்டார் என்றும் யாருக்கும் தெரியாது என்று கூறியதால் வேறு வழியின்றி இந்த அறிவிப்பை பொது அறிவிப்பாக வெளியிடுவதாக எனது கட்சிக்காரர் கூறுகின்றார்.

எனது கட்சிகாரருக்குச் சொந்தமான உயில் எண் 34/1996 தேதி 12.11.1996 குறித்து ஏதேனும் விவரம் தெரிந்தால் எனது கட்சிக்காரருக்கோ அல்லது எனக்கோ தெரிவித்து உதவிட வேண்டியது

S.செல்லையா B.A.B.L.,
அட்வகேட் நெ 38 வி,எம் நகர்,
அரசினர் மகளிர் பள்ளி எதிரில், திருவள்ளூர் 602001
வீடு 27661213, செல் 9443454303.


**Easun Reyrolle Limited**

Regd. Off: "Temple Tower" VI Floor, 672, Anna Salai, Nandanam, Chennai-600035.
Ph: +91-44-24346425 Fax: +91-44-24346435 Email Id: sec@easunreyrolle.com
Website : www.easunreyrolle.com CIN No. L31900TN1974PLC006695

ERL

**Extract of Audited Standalone and Consolidated Financial Results for the Quarter and Year ended March 31, 2019 under Ind AS**

(Rs. in Lakhs)

| Sl. No. | Particulars | Standalone | | | | Consolidated | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Quarter Ended | | Year Ended | | Year Ended | |
| | | 31-Mar-19 | 31-Mar-18 | 31-Mar-19 | 31-Mar-18 | 31-Mar-19 | 31-Mar-18 |
| | | (Audited) | | (Audited) | | (Audited) | |
| 1. | Total Income from Operations | 627.13 | 501.44 | 2,061.29 | 2,122.72 | 8,810.27 | 7,903.73 |
| 2. | Net Profit/ (Loss) for the period (before tax and exceptional items) | (767.36) | (688.77) | (1,800.73) | (2,146.33) | (1,033.73) | (1,560.03) |
| 3. | Net Profit/ (Loss) for the period before tax (after exceptional items) | (767.36) | (688.77) | (1,800.73) | (2,146.33) | (1,033.73) | (1,560.03) |
| 4. | Net Profit/ (Loss) for the period after tax (after exceptional items) | (767.36) | (688.77) | (1,800.73) | (2,146.33) | (1,033.73) | (1,560.03) |
| 5. | Other Comprehensive Income (net of tax) | (0.50) | 2,135.14 | 10.76 | 2,145.00 | 8.42 | 2,145.00 |
| 6. | Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] | (767.86) | 1,446.37 | (1,789.97) | (1.33) | (1,025.31) | 584.97 |
| 7. | Equity Share Capital (face value of Rs.2/- per share) | 615.88 | 615.88 | 615.88 | 615.88 | 615.88 | 615.88 |
| 8. | Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year | - | - | 15,855.95 | 17,645.92 | 13,469.95 | 13,983.51 |
| 9. | Earnings Per Share (of Rs.2/- each) (for continuing and discontinued operations) | | | | | | |
| | a. Basic | (2.49) | (2.24) | (5.85) | (6.97) | (3.36) | (5.07) |
| | b. Diluted | (2.49) | (2.24) | (5.85) | (6.97) | (3.36) | (5.07) |

Notes:

1 The above results were reviewed by the Audit Committee and thereafter approved and taken on record by the Board of Directors at their meeting held on October 26, 2019.

2 The statement has been prepared in accordance with the companies (Indian Accounting Standards) Rules, 2015 (Ind AS) prescribed under section 133 of the Companies Act, 2013 and other recognised accounting practices and policies to the extent applicable.

3 The figures for the quarter ended March 31, 2019 and March 31, 2018 are the balancing figures between audited figures in respect of the full financial year and unaudited published figures in respect of the financial results upto the third quarter of the respective financial years.

4 The above is an extract of the detailed format of the Audited Financial Results for the Quarter and Year ended March 31, 2019 filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Obligations Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Audited Financial Results for the Quarter and twelve months ended March 31, 2019 are available on the website of the BSE Limited i.e. www.bseindia.com and NSE Limited, i.e. www.nseindia.com, on the Stock Exchange where the Company's shares are listed and on the website of the Company i.e., www.easunreyrolle.com

5 The figures for the previous periods have been reclassified / regrouped wherever necessary.

For Easun Reyrolle Limited
Sd/-
Raj H Eswaran
Managing Director
DIN 00195354

Place: Chennai
Date: October 26, 2019